முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## AA2 பரீட்சை – 2017 சனவரி

## (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

(Business management and strategy)

2017-01-22
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம்:*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 06
வினாக்கள் : 10

(2) ***சகல வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்,*** *உங்களுக்குத் தரப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படுதல் வேண்டும்.*

(4) *உங்களால் ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தை*** *அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் நிறுவனம் ஒன்றின் உயர் மட்ட முகாமைக்கான ஓர் உதாரணமாக அமைபவர் யார்?

(1) மனித வள முகாமையாளர்
(2) கணக்காளர்
(3) பிரதம நிறைவேற்று அதிகாரி
(4) மேற்பார்வையாளர்

**1.2** சிக்கலான நிலைமைகளின்போது சிந்தித்து, விளங்கிக்கொண்டு தீர்மானமெடுக்கின்ற முகாமையாளரின் திறன்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) எண்ணக்கருத் (conceptual) திறன்கள்
(2) தனிமனிதத் (interpersonal) திறன்கள்
(3) தொழினுட்பத் திறன்கள்
(4) அறுதியீட்டுத் (Diagnostic) திறன்கள்

**1.3** பின்வருவனவற்றுள் நல்ல தகவல் ஒன்றின் பண்பியல்பாக **அமையாதது** எது?

(1) துல்லியமானதாக இருத்தல் (2) தொடர்புடமை காணப்படல்

(3) உரிய காலத்திற்கானதாக இருத்தல் (4) சிக்கலானதாக இருத்தல்

**1.4** கீழுள்ள கூற்றுக்களைக் கருத்திற்கொள்க :

**(a)** அது வீண்விரயத்தைக் குறைத்து உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான ஒரு முறைமையுடன் தொடர்புடையது.

**(b)** அது நிறுவனத்தின் கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் தகவல் பாய்ச்சலின் தேவையை வலியுறுத்துகிறது.

மேலுள்ளவற்றுள் யப்பானிய முகாமைத்துவப் பாணி (Style) தொடர்பான சரியான கூற்று/கூற்றுக்கள்:

(1) **(a)** மாத்திரம் (2) **(b)** மாத்திரம்

(3) **(a), (b)** ஆகிய இரண்டும் (4) மேலுள்ளவற்றில் எதுவுமன்று

**1.5** பின்வருவனவற்றுள் முகாமை ஒன்றின் கட்டளையிடலின் ஓரினத்தன்மைக் (Unity of Command) கோட்பாட்டினை மீறுகின்ற நிறுவனக் கட்டமைப்பு எது?

(1) தொழிற்பாடுசார் நிறுவனக் கட்டமைப்பு

(2) பிரிவு ரீதியான நிறுவனக் கட்டமைப்பு

(3) தாய (Matrix) அடிப்படையிலான நிறுவனக் கட்டமைப்பு

(4) வாடிக்கையாளர் அடிப்படையிலான நிறுவனக் கட்டமைப்பு

*வினா இல. **1.6** தொடக்கம் **1.10** வரையில் கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் கூறுக. உங்களது விடையினை (சரியானது / தவறானது) உங்களுக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.*

**1.6** சரியாகச் செய்தல் (doing things right) விளைவுத்திறன் (பயனுறுதி) (effectiveness) எனவும், சரியானதைச் செய்தல் (doing right thing) வினைத்திறன் (efficiency) எனவும் அழைக்கப்படுகிறது.

**1.7** அதிகாரத்துவ முகாமைக் கோட்பாடு (bureaucratic management theory) வேலையில் மனிதப் பரிமாணத்தை உள்ளடக்குவதால் அவை மனிதனுடன் தொடர்புடைய அணுகுமுறையாகக் கருதப் படுகின்றது.

**1.8** சூழ்நிலைசார் அணுகுமுறைக்கு (contingency approach) இணங்க முகாமையாளர்கள், சம்பந்தப்பட்ட விடயங்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் நடப்பு நிலைமையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை எடுக்கவேண்டியுள்ளது.

**1.9** நிறுவனத்தில் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டை எய்தும் பொருட்டு கட்டளையிடல், தீர்மானம் எடுத்தல் மற்றும் வளங்களை ஒதுக்கீடு செய்தல் என்பவற்றுக்கான பொறுப்பு, முகாமையாளர்களின் முறைசார்ந்ததும் சட்டப்படியானதுமான உரிமை ஆகும்.

**1.10** திறந்த முறைமையானது சூழலின் செல்வாக்கிற்கு ஆளாவதுடன் நிலைத்திருப்புக்காக சூழலுடன் இடைவினையுமாற்றுகிறது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி *A* முடிவு

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

“ஊழியர் குழுக்களைக் கட்டமைத்து ஒழுங்கமைப்பதில் முகாமையாளர்கள் பின்பற்றவேண்டிய பதினான்கு (14) கோட்பாடுகளை ஹென்றி பயோல் (Henri Fayol) அறிமுகப்படுத்தியுள்ளார்.”

ஹென்றி பயோலால் அறிமுகப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கோட்பாடுகள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக**.
(05 புள்ளிகள்)

### வினா 03

“நிறுவனக் கட்டமைப்பை வடிவமைக்கும் செயன்முறையில், முகாமையாளர்கள் அதிகாரத்தையும் பொறுப்பையும் பகிர்ந்தளித்தல் (delegate) வேண்டும்”

அதிகாரத்திற்கும் பொறுப்பிற்குமிடையிலான (authority and responsibility) தொடர்பினை **விபரிக்குக.**
(05 புள்ளிகள்)

### வினா 04

“வெற்றிகரமான வியாபாரத்திற்கு பயனுறுதிமிக்கதான தொடர்பாடல் ஒரு அத்தியாவசியக் காரணியாகும். பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்காகத் திருப்தி செய்யவேண்டிய பல நிபந்தனைகள் காணப்படுகின்றன”.

பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்காகத் திருப்தி செய்யவேண்டிய நிபந்தனைகள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.**
(05 புள்ளிகள்)

### வினா 05

“எந்தவொரு நிறுவனமும் முன்னோக்கி நகர்வதில் ஊழியரின் ஊக்கமும் செயலாற்றுகையும் பிரதான காரணிகளாக இருக்கின்றன. அதிகளவில் ஊக்கப்படுத்தப்பட்ட ஊழியர்கள், நிறுவனம் ஒன்றின் வினைத் திறனைக் கணிப்பிடுவதில் மிக முக்கிய வகிபாகத்தை ஆற்றுகின்றனர். வேறு வகையில் கூறுவதாயின், ஊக்கப்படுத்தப்படாத ஊழியர்களின் செயலாற்றுகை நிறுவனத்தினுள் குறைந்த உற்பத்தித்திறனுக்கு வழிவகுக்கும்.”

ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்படாமையை வெளிக்காட்டும் அறிகுறிகள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.**
(05 புள்ளிகள்)

### வினா 06

“அதிகாரத்தைத் தாபித்து நிறுவனம் முழுமைக்கும் பிரயோகம் செய்கின்ற செயன்முறை கட்டுப்படுத்தல் ஆகும்”.

கட்டுப்படுத்தலின் (controlling) நன்மைகள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

பகுதி *B* முடிவு

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

"பொதுமக்கள் பயனுறுதிமிக்க வகையில் பல்வேறுபட்ட பணிகளையும் ஆற்றுவதற்கு அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற செயன்முறையே தலைமைத்துவம் ஆகும். பயனுறுதிமிக்க தலைமைத் துவமின்றிய ஏனைய முகாமைத்துவத் தொழிற்பாடுகள் வெற்றிகரமானதாக அமையமாட்டாது. சகல முகாமையாளர்களும் தலைவர்கள் அல்ல அதேபோன்று சகல தலைவர்களும் முகாமையாளர்கள் அல்ல. தலைமைத்துவத்தின் பண்புசார் கோட்பாட்டிற்கு இணங்க, தலைவர்கள் ஈடிணையற்ற தலைமைத்துவப் பண்புத் தரங்களுடன் பிறக்கிறார்களேயன்றி அவர்களை விருத்திசெய்ய முடியாது."

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) தலைவருக்கும் (Leader) முகாமையாளருக்குமிடையே (Manager) உள்ள வேறுபாடுகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) தலைமைத்துவத்தின் பண்புசார் கோட்பாட்டிற்கு இணங்க, ஒரு பயனுறுதிமிக்க தலைவரின் பண்புத் தரங்கள் (qualities) நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

"எந்தவொரு நிறுவனத்தினதும் வெற்றியை அல்லது தோல்வியைத் தீர்மானிப்பதில் ஒழுங்கமைப்பு இன்றியமையாததாக இருக்கிறது. நிறுவனத்தில் மேலோங்குகின்ற கலாசார வகையும்கூட நிறுவனத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும். நிறுவன கலாசாரமானது கம்பனியின் ஒழுங்கமைப்பு, வரலாறு, உற்பத்திப்பொருள், சந்தை, தொழினுட்பவியல், தந்திரோபாயம் போன்ற பல்வேறுபட்ட காரணிகளினதும் செல்வாக்கிற்கு உட்படுகிறது."

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) நிறுவனத்திற்கு பயனுறுதிமிக்க ஒழுங்கமைப்புச் செயன்முறை ஒன்றினால் கிடைக்கும் நன்மைகள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) நிறுவனம் ஒன்றில் பயனுறுதிமிக்க காலாசாரமொன்றை உருவாக்குவதற்குச் சாத்தியமான நடவடிக்கைகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

"நிலைமாறும் வியாபார உலகிலே, சந்தையின் மாறும் நிலைமைகளுக்கு ஏற்ப விரைவாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் மாற்றத்திற்குள்ளாகுவதற்கு நிறுவனங்களை அனுமதிக்கின்ற மாற்றம் ஒரு இன்றியமையாத காரணியாகும். எவ்வாறாயினும், பல்வேறு காரணங்களால் பெரும்பாலான தனிநபர்கள் மாற்றத்திற்குத் தயக்கம் காட்டுவதால், மாற்றத்தை நடைமுறைப்படுத்துவது இலகுவான காரியமாக அமைவதில்லை. சிலநேரங்களில், இது நிறுவனத்தின் ஊழியர்கள் மத்தியில் நெறிமுறையற்ற நடத்தையையும் (unethical behavior) உருவாக்கும்."

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) மாற்றத்திற்கான தடைகளை வெற்றிகொள்ளும் முறைகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) நிறுவனம் ஒன்றின் ஊழியர்களது நெறிமுறையற்ற நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# <u>பகுதி D</u>

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

## வினா 10

**அக்ரோ மெக் பி.எல்.சி.** என்பது 1970 ஆம் ஆண்டு முதல், விவசாய இரசாயனப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்கின்ற வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு உள்நாட்டுக் கம்பனி ஆகும். 1990 களில், கம்பனியானது அதன் வியாபாரத்தை தோட்டத் துறைக்கு விசேடமாக தேயிலை மற்றும் இறப்பர் துறைக்குப் பரவலாக்கியுள்ளது. தற்போது, கம்பனியானது பல்வேறு வியாபாரங்களுடன்கூடிய ஒரு குழுமக் கம்பனியாக இயங்குவதுடன் அதன் வியாபாரமும் தந்திரோபாய வியாபார அலகுகளாக (SBUs) வெவ்வேறாக ஆளுகை செய்யப்படுகின்றன. எனவே, விவசாய இரசாயனப் பொருள் உற்பத்தி மற்றும் தோட்டப் பயிர்ச்செய்கை ஆகிய பிரதான வியாபாரங்கள் வெவ்வேறான தந்திரோபாய வியாபார அலகுகளாக இயங்குகின்றன.

வியாபாரச் சூழலில் மேலோங்குகின்ற நிலைமையானது விவசாய இரசாயனப் பொருள் வியாபாரத்திற்கு சாதகமற்றதாக அமையலாம் என்பதை அண்மையில் நடைபெற்ற தந்திரோபாய மீளாய்வுக் கூட்டத்தில், கம்பனியின் சிரேஷ்ட முகாமையாளர்கள் பலர் கூறியிருந்தனர். மேலும், விவசாய இரசாயனப் பொருட்களை நோக்கிய பொதுமக்களின் புலன் உணர்வு சாதகமான நிலையில் இல்லை என்பதையும் அவர்கள் அவதானித்திருந்தனர். இந்நிலைமையானது சமூகத்தில் உள்ள அழுத்தக் குழுக்களினதும் அபிப்பிராயத் தலைமைகளினதும் வகிபாகத்தின் மூலம் பிரதானமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அத்துடன், விவசாய உற்பத்திப் பொருட்கள் ஆசனிக் போன்ற மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பதார்த்தங்களைக் கொண்டுள்ளன என்பதையும் அவை அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள மக்களின் சிறுநீரகப் பிரச்சினை போன்ற தீவிரமான நோய்களுடன் நேரடித் தொடர்புடையவை என்பதையும் சில விஞ்ஞானிகள் ஆய்வு செய்திருந்தனர். வேறுவகையில் கூறுவதாயின், பொதுமக்களின் சுகாதாரக் கரிசினைகள் அதிகரிப்பதன் காரணமாக நாட்டில் சேதன விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி தொடர்ந்தும் அதிகரித்துச்செல்கிறது. இதன் விளைவாக, விவசாயிகள் சேதன உற்பத்திப் பொருட்களை நாடிச் செல்ல ஆரம்பிப்பதுடன் அவர்கள் தங்களுடைய பயிர்ச்செய்கைகளுக்கு விவசாய இரசாயனப் பொருட்களைப் பிரயோகிப்பதற்கும் தயங்குகின்றனர். மேலும், அவர்களில் சிலர் ஏற்கனவே பாரம்பரிய விவசாய முறைமைகளுக்கு நகர்ந்திருக்கின்றனர். எனவே, இந்நிலைமை விவசாய இரசாயனப் பொருட்கள் வியாபாரத்தின் எதிர்கால நிலைப்புத்தன்மையிலும் வளர்ச்சியிலும் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

நீங்கள் குழுமத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) எனவும் விவசாய இரசாயனப் பொருட்கள் வியாபாரத்தை மீளப்பெறுவதற்கும் சேதனப் பழவகைகள் மற்றும் காய்கறித் துறை வியாபாரத்தைப் பரவலாக்குவதற்கும் நீங்கள் ஏற்கனவே தீர்மானித்திருப்பதாகவும் கருதிக் கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) **அக்ரோ மெக் பி.எல்.சி. யின்** நடப்பு நிலைமை தொடர்பில் தீர்மானம் எடுப்பது ஏன் முக்கியத்துவம் மிக்கது என **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(b) **அக்ரோ மெக் பி.எல்.சி.** இன் புதிய சேதனப் பழவகைகள் மற்றும் மரக்கறி வியாபாரத்தின் திட்டமிடல் செய்முறையினை வழிநடத்துவதற்கான திட்டமிடல் கோட்பாடுகள் (planning principles) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) PEST அணுகுமுறையைப் பயன்படுத்தி அதன் வியாபாரப் பரவலாக்கத்திற்காக **அக்ரோ மெக் பி.எல்.சி.** இனால் சூழல் பகுப்பாய்வு (environmental analysis) எவ்வாறு கருத்திலெடுக்கப்படும் என்பதை **ஆராய்க.** (08 புள்ளிகள்)

(d) நிறுவனத்தின் பயனுறுதிமிக்க தலைவராக CEO இன் பிரதான தொழிற்பாடுகள் (key functions) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி *D* முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க** (Define) | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக** (Draw) | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க** (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக** (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக** (Relate) | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக.** (State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக** (Calculate / Compute) | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க** (Discuss) | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக** (Explain) | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக** (Interpret) | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல்** (Recognize) | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க** (Record) | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக** (Summarize) | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக** (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக** (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக** (Demonstrate) | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக** (Graph) | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக** (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக** (Prioritize) | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க** (Reconcile) | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக** (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க** (Analyze) | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக** (Compare) | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக** (Contrast) | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக** (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக** (Outline) | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |